

# மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரி முன்னாள் மாணவர் சங்க கூட்டம்

**மார்த்தாண்டம், ஜன. 28–**

மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரி முன்னாள் மாணவர் சங்க கூட்டம் நடந்தது.

மன்ற தலைவர் டாக்டர் மத்தியாஸ் தலைமை வகித்தார்.

முன்னாள் மாணவர் மன்ற துணைச் செயலர் பேராசிரியர் தேவகுமார் சாமுவேல் வரவேற்றார். செயலாளர் டாக்டர் பிஜு அறிக்கை வாசித்தார்.

கணக்கர் டாக்டர் ஆப்ஸ் பென் ரெஜி வரவு, செலவினங்களை ஒப்படைத்தார்.

பிரின்ஸ் எம்.எல்.ஏ., தாளாளர் ஜெயச்சந்திரன் ஆகியோர் பேசினர். ஆண்டு மலர் வெளியிடப்பட்டது.

முதல்வர் டாக்டர் பால்ராஜ் எதிர்காலத் திட்டம் குறித்து பேசினார். இணைச் செயலாளர் டாக்டர் ஐசக் ஷோபன ராஜ் நன்றி கூறினார்.